www.Padasalai.Net www.TrbTnpsc.com

| முதல் திருப்புதல் தேர்வு - 2025 | தேர்வு எண் |
|---|---|
| காலம் : 3.00 மணி **XII – விலங்கியல்** மதிப்பெண் : 70 | |

பகுதி - 1

*குறிப்பு: 1) அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.* **(15x1=15)**

*2) ஏற்புடைய விடையினைத் தேர்ந்தெடுத்து குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதுக.*

1. பின்வருவனவற்றில் இணை ஓங்கு தன்மை கொண்ட இரத்த வகை
அ) B ஆ) O இ) AB ஈ) A

2. பாக்டீரியாவில் இனப்பெருக்கம் நடைபெறும் முறை
அ) எண்டோஸ்போர் உருவாக்கம் ஆ) கேமிட் உருவாக்கம்
இ) சூஸ்போர் உருவாக்கம் ஈ) இணைதல்

3. கீழ்க்கண்டவற்றில் பிறவற்றிலிருந்து வேறுபடுவது
அ) மல்டிலோட் 375 ஆ) புரோஜெஸ்டாசெர்ட்
இ) NovT Cu 7 ஈ) CuT 380 Ag

4. நோயூக்கி உயிரியின் பகுதிகளைப் பயன்படுத்தித் தயாரிக்கப்படும் தடுப்பூசி வகை
அ) டி.என்.ஏ தடுப்பூசிகள் ஆ) துணையலகு மறுசேர்க்கை தடுப்பூசிகள்
இ) வலு குறைக்கப்பட்ட மறுசேர்க்கை தடுப்பூசிகள்
ஈ) வழக்கமாக சாதாரண தடுப்பூசிகள்

5. ஆர்க்கிடெக்டமி என்ற அறுவை சிகிச்சை மூலம் நீக்கப்படும் பகுதி
அ) கல்லீரல் ஆ) சிறுநீரகம் இ) அண்டகம் ஈ) விந்தகம்

6. வைடால் சோதனை மூலம் கண்டறியப்படும் நோய்த்தொற்று
அ) டைபாய்டு ஆ) காலரா இ) மலேரியா ஈ) கொரோனா

7. **கூற்று (A):** உலகின் மிகப்பெரிய பல்வகைத்தன்மை கொண்ட 17 நாடுகளில் இந்தியாவும் ஒன்று
**காரணம் (R):** இந்தியா தனித்தன்மை வாய்ந்த புவியமைப்பு மற்றும் மாறுபட்ட காலநிலைக்கூறுகளைக் கொண்டுள்ளது
அ) கூற்று A சரி, காரணம் R தவறு
ஆ) கூற்று A தவறு, காரணம் R சரி
இ) கூற்று A மற்றும் காரணம் R சரி, காரணம் R, கூற்று Aஐச் சரியாக விளக்குகிறது
ஈ) கூற்று A மற்றும் காரணம் R சரி, காரணம் R, கூற்று Aஐச் சரியாக விளக்கவில்லை

8. மனிதரில் சேற்றுப்புண்ணை ஏற்படுத்துவது
அ) பாக்டீரியா ஆ) பூஞ்சை இ) புரோட்டோசோவா ஈ) வைரஸ்

9. மீசோசோயிக் பெருங்காலத்தைத் தம் பொற்காலமாகக் கொண்டவை
அ) ஊர்வன ஆ) மீன்கள்
இ) பாலூட்டிகள் ஈ) தொடக்க கால இருவாழ்விகள்

10. ***பின்வரும் இருசமப்பிளவு முறைகளை அவற்றிற்கான எடுத்துக்காட்டுகளுடன் பொருத்தி, சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்***
a) கிடைமட்ட இருசமப்பிளவு - i) வோர்டிசெல்லா
b) எளிய ஒழுங்கற்ற இருசமப்பிளவு - ii) செராஷியம்
c) நீள் மட்ட இருசமப்பிளவு - iii) அமீபா
d) சாய்வு மட்ட இருசமப்பிளவு - iv) பிளனேரியா
அ) a-iii b-iv c-ii d-i
ஆ) a-ii b-iii c-i d-iv
இ) a-iv b-iii c-i d-ii
ஈ) a-iv b-i c-iii d-ii

11. வடிசாலைகளில் எத்தனால் உற்பத்திக்குப் பயன்படும் தளப்பொருள்
அ) கரும்பாலைக் கழிவுகள் ஆ) சோயா மாவு
இ) நிலக்கடலை ஈ) சோள உணவு

12. இயற்கையான வாழிடங்களினுள் உயிரியப் பல்வகைத் தன்மை பாதுகாப்பு என்பது
அ) சூழல் வெளிப் பாதுகாப்பு ஆ) உடல் உள் பாதுகாப்பு
இ) சூழல் உள் பாதுகாப்பு ஈ) உடல் வெளிப் பாதுகாப்பு

13. மெசல்சன் மற்றும் ஸ்டால் சோதனை மூலம் நிரூபிக்கப்பட்ட முறை

Scanned with OKEN Scanner
Kindly Send Me Your Questions & Answer Keys to us: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com

14. *தவறான இணையைக் கண்டுபிடிக்கவும்.*
அ) செல் விழுங்குதல் சார்ந்த தடைகள் - மோனோசைட்டுகள்
ஆ) உடல் அமைப்பு சார்ந்த தடைகள் - உடல் வெப்பநிலை
இ) உடற்செயலியல் சார்ந்த தடைகள் - வேதிய நடுவர்கள்
ஈ) வீக்கம் சார்ந்த தடைகள் - டையபீடெசிஸ்

15. தீங்கு தரும் கழிவுகளை எரிக்கும் போது உருவாகும் நச்சு வாயு
அ) நைட்ரஜன் ஆ) அம்மோனியா
இ) டையாக்சின்கள் ஈ) மேற்கூறிய எதுவுமில்லை

## பகுதி - 2 (6x2=12)

***குறிப்பு: எவையேனும் ஆறு வினாக்களுக்கு விடையளிக்கவும். (கட்டாய வினா 24)***

16. பருவ கால இனச்சேர்க்கையாளர்கள் எனப்படுபவை யாவை?
17. ஸ்பெர்மியோஜெனசிஸ் - வரையறு.
18. லையோனைசேஷன் என்றாலென்ன?
19. கடத்து ஆர்.என்.ஏ, 'இணைப்பு மூலக்கூறு' என ஏன் அழைக்கப்படுகிறது?
20. இணைப்பு உயிரிகள் என்பவை யாவை? எடுத்துக்காட்டு தருக.
21. உடல் உறுப்புகளில் ஏற்படும் அறிகுறிகளின் அடிப்படையில், வைரஸ் நோய்கள் எவ்வாறு வகைப்படுத்தப்பட்டுள்ளன?
22. 'ரோஸி' எனும் மரபியல்பு மாற்றப்பட்ட பசுவானது, இயல்பான பசுவினின்று எவ்வாறு வேறுபடுகிறது?
23. செந்தரவுப் புத்தகம் என்பது என்ன?
24. இண்டர்ஃபெரான்கள் என்பவை யாவை? இவற்றை இரத்தத்திலிருந்து பிரித்தெடுக்கலாம். ஆனால், அதற்கு அதிக அளவில் இரத்தம் தேவைப்படுகிறது இதனால், இது நடைமுறையில் சாத்தியப்படுவதில்லை, இந்த சிக்கலைக் கடந்து, அவற்றை உருவாக்க எந்த தொழில்நுட்பம் உகந்ததாகப் பரிந்துரைக்கப்படுகிறது?

## பகுதி - 3 (6x3=18)

***குறிப்பு: எவையேனும் ஆறு வினாக்களுக்கு விடையளிக்கவும்.(கட்டாய வினா 33)***

25. விந்து குழல் தடை - கருக்குழல் தடை வேறுபடுத்துக.
26. மனித அண்ட செல் - படம் வரைந்து பாகங்கள் குறிக்கவும்.
27. காலா - அசார் என்றாலென்ன?
28. புட்டியில் அடைக்கப்பட்ட சாறுகளைத் தெளிவடையச் செய்ய உதவும் நொதிகள் யாவை?
29. மேல்பூச்சாக்கம் எதிர்பொருள் வினைகளில் திறன் வாய்ந்ததாக ஏன் கருதப்படுகிறது?
30. உயிர்த்தொகையின் பண்புகள் சிலவற்றைக் குறிப்பிடுக.
31. இணை மரபற்றுப்போதலை தகுந்த எடுத்துக்காட்டுடன் விளக்குக.
32. சூழல் சுகாதாரக் கழிவறைகள் பற்றிக் குறிப்பு தருக.
33. ஹைபர் ட்ரைக்கோசிஸ் என்றாலென்ன? இப்பண்பு பெண்களைப் பொதுவாகப் பாதிப்பதில்லை. ஏன்?

## பகுதி - 4 (5x5=25)

***குறிப்பு: அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.***

34. அ) உயிரிகளில் நடைபெறும் பல்வேறு வகை ஒருங்கிணைவு முறைகளை விளக்குக.
*(அல்லது)*
ஆ) மாதவிடாய் கோளாறுகளின் பல்வேறு வகைகளை விளக்கி எழுதுக.

35. அ) ஒரு இயல்பான பார்வையுடைய ஆணுக்கும், நிறக்குருடு பாதிப்பு கொண்ட ஒரு பெண்ணுக்குமான திருமணத்தின் வாயிலாக நிறக்குருடுவின் மரபுக்கடத்தலை விளக்குக.
*(அல்லது)*
ஆ) மனித மரபணுத்திட்டத்தின் முக்கிய இலக்குகளை எழுதுக.

36. அ) சிற்றினமாக்கலை வரையறு. இதன் வகைகளைத் தகுந்த உதாரணங்களுடன் விளக்குக.
*(அல்லது)*
ஆ) மனிதனைப் பாதிக்கும் பல்வேறு பாக்டீரிய நோய்கள் பற்றிய விவரங்களை அட்டவணைப்படுத்துக.

37. அ) இம்யூனோகுளோபுலினின் அமைப்பைப் படத்துடன் விளக்குக.
*(அல்லது)*
ஆ) வீட்டுப் பயன்பாட்டுப் பொருட்களில், நுண்ணுயிரிகளின் பங்கினை உதாரணங்களுடன் விளக்குக.

38. அ) மரபியல்பு மாற்றப்பட்ட உயிரினங்களால் நேரிட வாய்ப்புள்ள ஆபத்துகள் யாவை?
*(அல்லது)*
ஆ) காற்று மாசுறுதலைக் கட்டுப்படுத்தும் சில வழிமுறைகளை ...

Scanned with OKEN Scanner

Kindly Send Me Your Questions & Answer Keys to us: padasalai.net@gmail.com